மாயன்
பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

The Poetic Expertise of Aranga.Srinivasan based on Vangathupparani

Dr. M. Iraivani

Assistant Professor, Tamil Research Centre, Lady Doak College, Madurai, India

Manuscript ID : **MT1A0005**
Volume : **1**
Issue : **1**
Month : **September**
YEAR : **2021**
Received: 17.08.2021
Revised: 25.08.2021
Accepted: 30.08.2021
Published: 04.09.2021
Pages : 48-57

ABSTRACT:

Poet Aranga. Srinivasan was one of the eminent poets in Tamil Literature. His works are renowned with literary fervour in Tamil culture. He is notable for his war poems and spontaneity of expressing ideas through his poetic excellence. Though this poetic genre was predominantly practised during 11th century, he could be grouped under one of the prominent war poets belonging to 20th century. In 1971, the then Prime Minister Mrs.Indra Gandhi initiated the Bengal war to protect human rights and establish democracy. Because of the untiring efforts and support of the Indian army, within two weeks Bangaladesh got its independence. This kindled the patriotic spirit of Aranga.Srinivasan to compose the war poem titled vangathupparani written in a span of eleven days. This work serves as an example in exposing his skill and elegance in writing poetry.

KEYWORDS:

Poetic structure, Reason for war, Poetic Excellence, Creativity, Figure of speech, Word pun, Rhyme scheme

REFERENCES :

1. Aranga.Srinivasan, Vangathupparani, University Publication, Chennai,1972
2. Aranga.Srinivasan, Biography
3. S.V.Subramanian, History in Tamil Literatrue, Manivasagar Publication, Chennai.
4. Senthamil Selvi, War Victory Murasu Malar, January 1972
5. S.Balachandran, Literary Review, New Century Book House, Chennai.

அரங்க.சீனிவாசனாரின் கவித்திறன்- வங்கத்துப்பரணி

முனைவர் மு. இறைவாணி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு நடுவம், டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

கவிஞர் அரங்க. சீனிவாசன் அவர்கள், அன்றைய ஆசுகவியைப் போல் பாடும் திறம் பெற்றவர். தமிழார்வத் துடிப்பும் இலக்கணச் செம்மையும் இவர் கவிதைகளில் வெளிப்படும். எளிமையும் எழுச்சியும் கொண்ட சொற்களால் கவிபாடியவர். இருபதாம் நூற்றாண்டில் பரணி பாடிய முதல் கவிஞர் எனலாம். 1971ஆம் ஆண்டு வங்கத்து விடுதலைப் போர் நடைபெற்றது. போரினால் ஏற்பட்ட வன்கொடுமைகளைக் கண்ட வீரமங்கை இந்திராகாந்தி அவர்கள் மனித உரிமைகளைக் காப்பதற்கும் மக்களாட்சியின் மாண்பினை நிலைநாட்டுவதற்கும் போரைத் தொடங்கினார். வங்க விடுதலை வீரர்களுக்கு உதவியாக நடைபெற்ற இரண்டு வாரப் போரில் இந்தியப்படையினரின் முயற்சியால் வங்கநாடு விடுதலைப் பெற்றது. நாட்டுப்பற்றுணர்வும் வீர உணர்வும் கொண்ட கவிஞர் பதினொரு நாட்களில் வங்கத்துப்பரணியை எழுதி முடித்தார். வங்கத்துப்பரணியில் கவிஞரின் கவிநயம் வெளிப்படுமாற்றை நன்கு அறியலாம்.

கருச்சொற்கள்

பரணி அமைப்பு, போர்க்காரணம், கவிநயம், கற்பனைச் செறிவு, அணிநயம், சிலேடைச் சிறப்பு, சந்த நயம்

முன்னுரை

இலக்கணப்பிடிப்பும் தமிழார்வத்துடிப்பும் கொண்டு எளிமையும் எழுச்சியும் கொண்ட சொற்களால் கவிபாடியவர் அரங்க.சீனிவாசன். உள்ளத்து உணர்ச்சியின் வெளிப்பாடாகப் புறப்படும் அவரது கவிதைகள் படிப்போர் உள்ள உணர்ச்சியையும் தட்டி எழுப்பும் ஆற்றலின. 'கம்பர் வழிக் கவிஞர்' என்ற விருது பெற்ற, "ஆயிரம் கவிஞர் ஆயினும் அரங்க.சீனிவாசன் ஆவரோ"[1] என்று கி.வா.ஜகந்நாதன் அவர்களால் பாரட்டப் பெற்றமை ஒன்றே அரங்க. சீனிவாசனின் கவியாற்றலை எடுத்தியம்புப் போதுமானது. தமிழிலுள்ள தொன்னூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களில் போர்க்களம் குறித்த பாடல்களைக் கொண்ட இலக்கியம் 'பரணி'எனப்படும்.

“ஆனை ஆயிரம் அமரிடை வென்ற

மான வனுக்கு வகுப்பது பரணி”[2]

என்பது பரணிக்கு வகுக்கப்பட்ட இலக்கணம். பொதுவாகப் பெரும்போரில் வென்ற தலைவனைச் சிறப்பித்துப் பாடுவது பரணியின் மரபு. 1971ஆம் ஆண்டு வங்கநாடு காரணமாக நடைபெற்ற மேற்கு பாக்கித்தான் - இந்தியப்போரில் வெற்றி வாகை சூடிய இந்தியநாட்டுப் படையினரின் வீரமும் வெற்றியும் விளம்புவது. வங்கத்துப்பரணி.

பரணி அமைப்பு

நீண்டகாலம் உணவின்றி வாடும் பேய்கள் இறுதியில் தங்கள் பசிகுறித்துத் தலைவி காளியிடம் முறையிட, கூளி என்னும் ஒரு பேய் அருகே நடந்த பெரும்போர் ஒன்றினைப் பற்றி காளியிடம் கூறி அக்களத்திற்குச் சென்றால் மாண்டு கிடக்கும் படைவீரர்தம் பிணக்குவியல்களை அனைத்துப் பேய்களும் வயிறார உண்ணலாம் என்று கூறும். உடனே காளியின் தலைமையில் பேய்கள் அனைத்தும் போர்க்களம் சென்று பிணங்கண்டு மகிழ்வதாக அமைவது பரணியின் மரபு. வெற்றி பெற்ற வீரர்கள் தம்ஊர் திரும்பி கோபத்தால் அடைத்திருக்கும் கதவுகளைத் திறக்குமாறு தத்தம் மனைவியை ‘கடைத்திறப்பு’ முன்னதாக வர அமையப் பெறுவது பரணி. இதே அமைப்பில் பாக்கித்தான் - இந்திய போர்க்களக்காட்சிகளைப் பரணி இலக்கியமுறை வழுவாது கடவுள் வாழ்த்து, கடைத்திறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, பேய்முறைப்பாடு, காளிக்குக் கூளி கூறியது, களம் காட்டல், கூழ் அடுதல், கூழ் இடுதல் போன்ற உறுப்புகளைக் கொண்டு பாக்கித்தான் - இந்தியப்போரில் பதினான்கு நாட்களில் வெற்றி பெற்ற இந்தியத் திருநாட்டைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் கவிஞர் அரங்க.சீனிவாசன்.

புனைவில் புதுமை

பரணி இலக்கணத்தைப் பின்பற்றி, பழையன கழித்துப் புதியன புனையும் முறையில் இயற்றப்பட்டது வங்கத்துப்பரணி என்பதே இந்நூலின் தனிச்சிறப்பு. ‘வங்கத்துப்பரணி’ என்ற இந்நூலின் பெயர் பழைய பரணி இலக்கண மரபு கழித்துப் புதிய புனைவாக்கம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போரில் தோற்றவர் பெயரிலேயே பரணி நூல்கள் பெயர் பெறுவதை ‘கலிங்கத்துப்பரணி’, ‘தக்கயாகப்பரணி’, ‘சீனத்துப்பரணி’ போன்ற நூற்பெயர்களால் அறியலாம். பாக்கித்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே நடைபெற்ற போரில்

பதினான்கு நாட்களில் நலிவுற்ற பகைப்படைகள் இந்தியப்படையிடம் சரணடைந்தன. இப்போர் வெற்றியின் விளைவாகத் தோன்றிய புதியநாடு தான் வங்கநாடே தவிர, 1971ல் நடைபெற்ற போரில் வங்கநாட்டிற்கு நேரடியான பங்கேதும் இல்லை. ஆனால், வங்கநாட்டின் வீரத்தை - சுதந்திர வேட்கையை மதிக்கக் கருதிய ஆசிரியரின் மாற்றுச் சிந்தனையின் விளைவுதான் வங்கத்துப்பரணி என்ற இப்புதிய பெயர்ப்புனைவு.

வங்கத்து விடுதலைப் போர் தொடங்கிய போது அந்நாட்டு மக்கள் காட்டிய பல வீரச் செயல்கள் கவிஞர் மனதைத் தொட்டன. குறிப்பாக, தன் இன்னுயிரைத் தியாகம் செய்து பகைவர் பலரை அழித்த உரோசனா பேகம் என்ற பெண்ணின் வீரம் அவர் உள்ளத்தை உலுக்கியது. டாங்கி வரும் வழியில் படுத்திருந்த உரோசனா மீது பகைவர் டாங்கியை ஏற்றி நசுக்கினர். உரோசனா தன் உடலில் மறைவாகக் கட்டியிருந்த வெடிகுண்டுகள் வெடித்த வேகத்தில் பகைவர் உடல் சிதைந்து சிதறினர். உள்ளத்திலேஉரம் கொண்ட உரோசனாவின் வீரத்தையும் தியாகத்தையும் காவியமாக்கத் துடித்தது கவிஞரின் உள்ளம்.

பின்னர், மேற்குப் பாக்கித்தானியர் 1971ஆம் ஆண்டு வடஇந்திய நகரங்கள் சிலவற்றின் மீது குண்டுகளை வீச முற்பட்ட போது இந்தியப்படையின்ர் எதிர்த்தாக்குதல் நடத்தினர். இதன் விளைவாக மூண்ட போர்ச்செய்தி கவிஞர்தம் உள்ளத்தில் வீரக்கனல் எழுப்பியது. பரணிபாடும் ஆவல் நெஞ்சில் திரள பாக்கித்தானின் படையெடுப்புக்கு மூன்று நாட்களுக்குப் பிறகு எழுதத் தொடங்கிய பரணி நூல் இந்தியநாடு வெற்றி பெற்ற பதினான்காம் நாள் நிறைவு பெற்றது.

போர்க்காரணம்

ஒருபுறம் வங்கநாட்டினர் அகதிகளாக இந்திய நாட்டிற்கு அடைக்கலம் தேடி ஓடிவந்தனர். மற்றொரு புறம் பாக்கித்தான் படையெடுக்க முற்பட்டது. அகதிகளால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியொருபுறம், இவற்றிற்கு இடையில் நெஞ்சுரம் கொண்ட வீரமங்கை இந்திராகாந்தி அவர்கள் பாக்கித்தான் மீது பதிலடி கொடுக்க முடிவெடுத்த செயல் வங்க நாட்டின் விடுதலைக்குக் காரணமாயிருந்த அரிய செயல் எனலாம். இந்திய முப்படைத்தலைவர்களான திரு.மானெக் ஷா, திரு.நந்தா, திரு.லால் ஆகியோர் போர்த்திறம் கண்டு வியந்தது உலகம். பதினான்கே நாட்களில் பகைப்படை சரணடைந்தது. புட்டோ, யாயாகான் ஆகிய பாக்கித்தான் தலைவர்கள் தக்க பாடம் கற்றனர்.

கவிநயம்

வங்கத்துப்பரணியில் முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்றிக் கையாளப்பட்டுள்ளது. எனினும் பெரும்பாலான இடங்களில்

புதுவகைக் கற்பனைகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நூலின் நடை மிகவும் எளிமையாகவும் தெளிவாகவும் இருப்பதால் படிப்பதற்கு இனிதாகிறது. செஞ்சொற்கள் பல வழக்கிழந்து போகாவண்ணம் பாடல்களில் பயின்று வருதல் பாராட்டற்குரியது. பல்வகைத் தாழிசைகளைக் கையாண்டு பரணி நூல் மரபினைக் காத்துள்ளார் கவிஞர். கவிதையின் உணர்ச்சி குன்றாவண்ணம் சந்தப்பாடல்கள் பலவற்றைப் பயன்படுத்தியுள்ளார். அணிகளை அணிபெற அமைத்துள்ளார். வல்லெழுத்து வண்ணம் குற்றெழுத்து வண்ணம் முதலிய அரிய பாடல்கள் சிலவற்றைப் பொருள் தெளிவுடன் சிறப்புடன் கையாண்டுள்ளார்.

கற்பனைச் செறிவு

இரண்டடிப் பாடல்களாகிய தாழிசைகளுக்குள் கவிதை நயங்களை இணைத்துத்தரும் கலையில் வல்லவராக விளங்குகிறார் அருட்கவி அரங்க.சீனிவாசன். கவிஞரின் கற்பனை வளமும் உவமை நயங்களும், அணி ஆற்றலும் நூல் முழுவதும் விரவிக் கிடக்கின்றன. பரணி இலக்கியத்தில் பேய்கள் கூழ் சமைக்கும் காட்சி கவிஞரின் கற்பனை வளத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகிறது.

“கப்பல் நான்கை நிமிர்த்து வைத்துக்

கற்றூ ணாக நிறுத்தீரே!

ஒப்பில் பெரும் போர்க் கப்பல்கவிழ்த்து

உயர்வி தானம் ஆக்கீரே!” [33](கூழ் அடுதல் - பாடல் எண்13)

“ஒறுக்கும் சமரிற் பாரதத்தார்

ஒன்று திரண்டு, தம்வாளால்

அறுக்கும் தலைகள் நன்கடுக்கி

அடுப்புக் கூட்டிக் கொள்ளீரே!”[4] (கூழ் அடுதல் - பாடல் எண்13)

என்று மேலும் மேலும் கற்பனைத் திறத்தால் கவிதைத்திறன் காட்டிச் செல்கிறார்.

அணிநயம்

இலக்கியத்தை அழகுறச் செய்வது அணி என்ற கருத்து, ‘அணியிலாக் கவிதை பணியிலா வனிதை’ என்ற பழமொழியால் நன்கு விளங்கும். கவிதையின் உயிர்நிலையாக விளங்கும் கற்பனையை விளக்குவதற்கு அணிகள் மிகவும் இன்றியமையாதவனவாம்.

கவிஞர் அரங்க.சீனிவாசன் பரணியை அணி செய்யவும் அவர்தம் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் விளக்கமாகக் கூறவும் பல்வேறு அணிகளைக் கையாண்டுள்ளார். அவற்றுள் அணிகளுக்கெல்லாம் அடிப்படை அணியாகிய உவம அணியினைக் கவிஞர் பயன்படுத்தியுள்ளமுறை புதுமையானது.

தமிழ் இலக்கண விதிகளையே உவமையாக்கும் நயம்

காளிக்குக் கூளி கூறிய பகுதியில் தமிழ் இலக்கண உவமைவழி இந்தியப்படையினர்ன் வெற்றி முரசு கொட்டப்படும் அழகே அழகு.

“கனிச்சுவை தருவெண் பாவிற்

காய்எதிர் நிரை நில்லாது

தனிச்சிறப் படைய மாமுன்

நேர்வரும் தகுதி எது?”[5] (காளிக்குக் கூளி கூறியது-பாடல் எண்-78)

என இந்தியப்படை முன்நிற்கும் தகுதி பகைவருக்கில்லை என்பதை இலக்கணவிதிதனை உவமையாகக் கொண்டு கூறவரும் கவிஞர் அப்பகுதி முழுவதையுமே உவமைக்களஞ்சியமாக்குவது அவரது இலக்கண அறிவின் விளக்கமாகிறது.

“சந்தியிலே முளைத்த ஒற்றுத்

தனித்த பொருள் கொள்வதுண்டோ?

இந்தியர்க்குத் தீங்கெண்ணும்

எண்ணம் வெற்றி கொள்வதுண்டோ?

குற்றுகரம் உயிர்வந்து

கூடியதும், ஓடாதோ?

ஒற்றெழுத்துப் பல எனினும்

ஒரு சொல்லின் முதலாமோ?”[6] (காளிக்குக் கூளி கூறியது-பாடல் எண்-90, 91)

என பகைவர் பலர் கூடினாலும் இந்தியரை வெல்ல இயலாது என இலக்கண உவமைவழி எடுத்துரைப்பது கவிஞரின் சொல்லாற்றலுக்கும் நாட்டுப்பற்றுணர்விற்கும் தக்க சான்றாகும்.

சிலேடைச் சிறப்பு

சிலேடையாகப் பேசுவதும் எழுதுவதும் கவிஞருக்குக் கைவந்த கலையாக உள்ளதை வங்கத்துப்பரணியில் இடம் பெற்றுள்ள கவிதைகள்வழி காணலாம். செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை ஆகிய சிலேடைகளைக் கவிஞர்கள் பயன்படுத்துவது தொன்றுதொட்டு வரும் மரபாம். இம்மரபு வழியினைப் பின்பற்றி பல இடங்களில் பிரிமொழிச் சிலேடையும் சில இடங்களில் பிரிமொழிச் சிலேடையும் அமையப் பாடியுள்ளார்.

கூளி, காளிக்குக் கூறுமிடத்து,

“செருக்களந் தறிய லாகாத

திண்மனத் தீயர் பட்ட

செருக்களந் தெரியக் காண்க!” [7] (களங்காட்டல் - பாடல் எண்- 1)

எனவரும் பாடலின் முதலடியை செருக்கு அளந்து அறியல் ஆகா எனப் பிரித்துப் பார்க்கும் போது செருக்கு மிக்க தீயவர்' என்ற பொருளிலும் இரண்டாம் அடியில் தீயவர்பட்ட செருக்களம்' என்ற பொருளிலும் வந்து சிலேடையின்பம் நல்குகிறது.

“பிணங்களந் தவுணர்க் காய்ந்த

பெருந்திற லுடைய அன்னை,

பிணங்களந் தன்னைக் கண்டு

பேய்கட்கும் காட்டலுற்றாள்” [8] (களங்காட்டல் - பாடல் எண்- 2)

எனவருமிடத்து பிணக்கு அளந்து அவுணர் காய்ந்த அன்னை பிணக்களம் கண்டு' என்று பிரிமொழிச் சிலேடையாய் மடக்கணியின் சுவைதந்து நிற்கிறது.

“இந்திரா இரவைப் போலும்

இருள்மனத் தொளியை ஏற்றும்

இந்திரா புகழைப்பாடி” [9] (கூழ் இடுதல் - பாடல்எண் -30)

என்பதில் இந்திரா - இந்து இரா இராவு எனப் பிரித்து நிலவு இல்லாத அமாவாசை இரவு போன்ற இருண்ட மனத்திலும் ஒளியேற்றும் இந்திரா என இந்திராகாந்தியின் துணிவையும் வீரத்தையும் புகழ்ந்து பாடுமிடம் பாராட்டற்குரியது.

செம்மொழிச் சிலேடை

காளி கூளிக்குக் கூறுவதாக வரும்,

"கடுகும் குண்டு களையெடுத்து

கடுகாய் அதனுட் கொட்டீரே"[10] (கூழ் அடுதல் - பாடல் எண்- 26)

என்ற பாடல் சிறந்த செம்மொழிச் சிலேடைப்பாடல், முதலடியில் வரும் கடுகு - விரைவு என்ற பொருளிலும் இரண்டாமடியில் வரும் கடுகு தாளிப்பதற்குரிய கடுகையும் குறிப்பதாகவும் வருதல் செம்மொழிச் சிலேடைக்குச் சிறந்த சான்றாகும்.

தற்குறிப்பேற்றம்

ஒரு பொருளுக்குரிய இயல்பான காரணத்தை விடுத்து, தாங்கள் கருதிய வேறொரு காரணத்தை அப்பொருள்மீது ஏற்றி தாம் கூற வந்த செய்தியின் அழகும் பொருளும் இனிது விளங்கச் செய்வது கவிஞர் இயல்பு, இதனைத் தற்குறிப்பேற்ற அணி என்பர் இலக்கண நூலார். இலக்கணச் செழுமை மிக்க கவிதைகள் வடிப்பதையே தனது நோக்கமாக்க் கொண்ட கவிஞர் அரங்க. சீனிவாசன் வங்கத்துப்பரணியில் எண்ணற்ற பாடல்களில் தற்குறிப்பேற்ற அணிநலம் சிறக்கச் செய்கின்றார்.

அறவழி நிற்போர் தமக்கு ஐயறிவுயிர்கள் தாமும் உறவெனக் கொண்டு தொண்டு செய்யும் என்ற கருத்தைக் கூற வரும் கவிஞர்,

"பயிறலங் காக்கப் போந்த

பாரத வீரர் மீது

வெயில் படா திறக்கைதன்னை

விரித்திடும் கழுகு காண்மின்"[11] (களங்காட்டல் - பாடல் எண்- 9)

என்று தற்குறிப்பேற்ற அணி சிறக்கப்பாடுகிறார். போர்க்களத்தில் பிணம் தின்னக் கழுகுகள் கூட்டமாக சிறகுகளை விரித்துப் பறந்து நிற்றல் இயல்பான ஒரு காட்சி. இக்காட்சியின் மீது அறம் காக்கச் சென்ற இந்திய வீரருக்கு கழுகு நிழல் தருவதாகச் சொல்வது கவிஞரது கற்பனைத் திறத்தையும் கருத்து விளக்கத் திறத்தினையும் காட்டும்.

மடக்கணி

'கூழ்அடுதல்' பகுதியில் காளி பேய்களைப் பார்த்து, கூழ் சமைக்கத் தொடங்குங்கள் குளிர்ந்த குருதியில் நீராடி கூழைச் சமையுங்கள் என்று சொல்ல வருமிடத்து,

"அடுகளம் முழுதும் கண்டு

காட்டுதற் கரிதாம் கூழை

அடுகளங்குருதி நீரில்

ஆடி என்றைன்னை சொன்னாள்"[12] (கூழ் அடுதல் - பாடல் எண் -1)

என்பர். முதலடியில் அடுகளம் - அடும் களம் எனப் பிரிந்து போர்க்களம் என்ற பொருளிலும் இரண்டாம் அடியில் அடுங்கள் - அம் குருதியில் எனப் பிரிந்து சமையுங்கள் என்ற பொருளில் வந்து கவிதைக்கு அழகு தருகிறது.

கவிஞர் பயன்படுத்தியுள்ள அணியமைதிகள் அவர்தம் உணர்வுத்தன்மைதனை உரைப்பனவாய் கற்பனைத் திறத்தை கருத்து வளத்தை வெளிப்படுத்துவனவாய் விளங்குகின்றன.

குற்றெழுத்து வண்ணம் வல்லெழுத்து வண்ணம்

"சிட்டுக்குருவி ஒத்துப் பகைவர்

செத்துக் குவியக் குவிய

வெட்டுக் குவியல் இட்டுத், தலைகள்

வெட்கிக் கவியக் கவிய" [13] (காளிக்குக் கூளி கூறியது - பாடல் எண் -140)

எனக் குற்றெழுத்து வண்ணத்தில் பகைவர் வீழ்ச்சியைக் காட்டுகிறார்.

"தட்டுக் கெட்டுக் துப்புக் கெட்டுத்

தத்திக் கத்திக் கதறக்

கட்டுப் பட்டுக், குப்புற் றுப், பற்

கட்டுக் கொட்டிப் பதற

குட்டுப் பட்டுப், பிட்டுப் பட்டுக்

கொத்துக் கொத்துச் சிதறச்

சுட்டுச் சுட்டுச் சுட்டுச் சுட்டுச்

சுக்குச் சுக்குற் றுதற"[14] (காளிக்குக் கூளி கூறியது - பாடல் எண்- 142,143)

எனப் பகைப்படைகள் சிதறுவதை வல்லெழுத்து வண்ணம் அமையப் பாடியிருத்தல் கவிஞரின் அரிய ஆற்றலை இயம்புகின்றது.

சந்த நயம்

சந்த நயம் மிக்க தாழிசைப்பாக்கள் கொண்டு கவிஞர்தம் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் இடங்கள் பல,

"கட்டுப்படாத திறலாலே

கற்பட்ட தோளின் வலியாலே

விட்டுக் கொடாத விறலாலே

வெற்றிக்கு வாழும் படையாலே

குட்டுப்ப டாமல் அகல்வாரே

கொப்பத்தில் வீழ வருவாரோ?

எட்டிச் செல்லாமல் எதிர்வாரேல்

எற்றிக் கொல்லாமல் விடுவாரோ?"[15] (காளிக்குக் கூளி கூறியது - பாடல் எண்- 76,77)

இந்தியப்படை முன் பகைப்படை அழிந்தொழியும் என வீரமுழக்கம் செய்கிறார்.

முடிவுரை

"உணர்ச்சியின் வெளிப்படையாய் அமைவதே கவிதை"[16] என்னும் திறனாய்வாளரின் கருத்திற்கேற்ப வங்கத்துப்பரணி முழுவதும் கவிஞரின் வீர உணர்வும், நாட்டுப்பற்றுணர்வும் விரவிக்கிடக்கின்றன. சந்தங்களாலும் வண்ணங்களாலும் கலையாற்றலுடன் உணர்ச்சி பொங்க கருத்தினை விளக்கிடும் கவிஞர் அரங்க. சீனிவாசனின் கவித்திறத்தின் முழு உருவாக விளங்குகிறது வங்கத்துப்பரணி எனில் அ∴து மிகையில்லை.

சான்றெண் விளக்கம்

1. அருட்கவி அரங்க.சீனிவாசன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்,ப.8
2. ச.வே.சுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு,ப.195
3. அரங்க.சீனிவாசன், வங்கத்துப்பரணி,ப.90
4. மேலது, ப.91
5. மேலது, ப.56
6. மேலது, ப.58
7. மேலது, ப.83
8. மேலது, ப.83
9. மேலது, ப.100
10. மேலது, ப.93
11. மேலது, ப.84
12. மேலது, ப.88
13. மேலது, ப.68
14. மேலது, ப.62
15. மேலது, ப.55
16. சு.பாலச்சந்திரன், இலக்கியத் திறனாய்வு, ப.135

துணைநூற்பட்டியல்

1. அரங்க.சீனிவாசன், வங்கத்துப்பரணி, கழக வெளியீடு, சென்னை,முதற்பதிப்பு,1972..
2. அருட்கவி அரங்க.சீனிவாசன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்.
3. சுப்பிரமணியன்,ச.வே., தமிழ் இலக்கிய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை,ஆறாம் பதிப்பு, 2007.
4. செந்தமிழ்ச் செல்வி, போர் வெற்றி முரசு மலர், ஜனவரி 1972.
5. பாலச்சந்திரன்,சு., இலக்கியத்திறனாய்வு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பத்தாம் பதிப்பு, 2007.